# பெண்ணே!
# இதோ உன் சட்ட உரிமைகள்

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்
சென்னை – 600 005

# அணிந்துரை

தங்களது உரிமைகளை பெண்கள் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தெரிந்துக் கொள்ள வேண்டிய முக்கியமான சட்டங்களின் அடிப்படைகளை 'பெண்ணே... உனது சட்ட உரிமைகள் இதோ!' என்கிற இந்த சட்ட விழிப்புணர்வு கையேடு எடுத்துக் கூறுகிறது. தமிழகம் முழுவதிலும் உள்ள பெண்களுக்கு இது பயன்பட வேண்டும் என்பதே இதன் நோக்கம். பெண்கள் மத்தியில் மட்டுமல்ல, ஆண்கள் மத்தியிலும் இதனை கொண்டு செல்ல வேண்டும். இதை படிப்பதோடு நின்றுவிடக் கூடாது. பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். செயல்படுத்த வேண்டும். இந்த விழிப்புணர்வு கையேட்டினை நமது மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு சகோதரிக்கும் கொண்டு சேர்க்கும் பணியில் ஒவ்வொருவரும் முனைப்பு காட்ட வேண்டும். அப்போது தான் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று நம்புகிறேன்.

இந்த சட்ட விழிப்புணர்வுக் கையேட்டின் உருவாக்கத்தில் தனது அர்ப்பணிப்புடன் கூடிய சிறப்பான பங்களிப்பை செலுத்திய சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர். திருமதி. T.R.தாரா அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

**திருமிகு.A.S.குமரி**
**தலைவர்**
**தமிழ்நாடு மகளிர் ஆணையம்**

# அறிமுகம்

ஒரு சமூகத்தின் வளர்ச்சியை அந்த சமூகத்தில் பெண்களின் வாழ்க்கை நிலை, முன்னேற்றம், நல்வாழ்வு, சமூக, அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தான் அளவிட முடியும் என்றார் டாக்டர். அம்பேத்கர்.

இந்தியாவில் பெண்கல்வி தேசிய சராசரி 70.8% ஆக இருக்கையில், தமிழ்நாட்டில் இது 77.9% ஆக உள்ளது. வேலைக்குச் செல்லும் பெண்களின் தேசிய சராசரி 28.7% ஆக இருக்கையில் தமிழ்நாட்டில் இது 38.3% ஆக உள்ளது. இது போன்ற சில அடிப்படையான சமூகக் குறியீடுகளை கண்டாலே தமிழ்நாட்டில் சமூக, அரசியல், பொருளாதாரத் தளங்களில் பெண்களின் பங்கேற்பு தேசிய சராசரிகளைவிட முன்னேறியிருப்பதை உணர முடியும்.

இந்த முன்னேற்றங்கள் எல்லாம் எளிதாகவும், இயல்பாகவும் நடந்து விட்டவில்லை. தமிழகத்தில் பெண்கள் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட மாமனிதர்கள் மற்றும் பேரியக்கங்களின் அரும்பணிகளின் விளைவாகவே சாத்தியமாகியது. இதை பாதுகாத்து, முன்னேறிச் செல்ல வேண்டிய அவசியம் நமக்கு உள்ளது.

தமிழ்நாட்டில் கல்வி, வேலை, சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு, ஆண்களின் அடிமைகளாக, சமூக மதிப்பற்றப் பிறவிகளாகப் பெண்கள் ஒடுக்கப்பட்ட அவலம் நிலவிய காலத்தில் பெண் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் வரலாறு நெடுகிலும் பல்வேறு சிர்திருத்த சிந்தனையாளர்களும், முற்போக்கான சமூக அமைப்புகளும் கடுமையான போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர்.

இவற்றின் பயனாக 1921-லேயே நீதிகட்சியின் ஆட்சியில் இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இதே போல், தேவதாசி முறை ஒழிப்பு, விதவை மறுமணம், பெண் கல்வி, பெண்களுக்கான வேலை வாய்ப்பு என ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சமமான அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை மீட்டு பெண்களை சமூக நீரோட்டத்தில் பங்கேற்க வழிவகுத்தன. இதே போல் இந்தியா முழுவதும் பெண்

விடுதலை, பெண்ணுரிமை கோரிக்கைகளுக்கான போராட்டங்களும் தீவிரமடைந்தன. இவை எல்லாம் அன்றைய காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வீருகொண்டு நடைபெற்று வந்த விடுதலைப் போராட்டத்திலும் அழுத்தமான தாக்கங்களை ஏற்படுத்தின. இதன் பயனாக பெண் விடுதலை, பாலின சமத்துவம் உள்ளிட்ட கோரிக்கைகள் விடுதலைப் போராட்ட கோரிக்கைகளாக ஏற்கப்பட்டன.

சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்தை உருவாக்கும் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாக 15 பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில் திருமதி. ரேணுகா ரே, ஹன்ஸா மேத்தா போன்றோர் பெண்களுக்கெதிரான சமூக ஒடுக்குமுறைகளை குற்றச் செயல்களாக அரசியல் சாசனம் அறிவிக்க வேண்டும் என்றும், சமூக, அரசியல் பங்கேற்பில் பெண்களின் பங்களிப்பை உறுதிப்படுத்திடும் வகையில் அவர்களுக்கான இடஒதுக்கீட்டை உத்திரவாதப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி கடும் போராட்டங்களை நடத்தி வெற்றியும் பெற்றார்கள். இப்படி பல்வெறு போராட்டங்களின் பயனாக உருவாக்கப்பட்ட நமது அரசியல் சாசனம்,

“இந்தியா ஒரு இறையாண்மைமிக்க, மதச்சார்பற்ற, ஜனநாயக சோசலிச குடியரசு” என்று முகப்புரையிலேயே சமத்துவத்தை தனது அடிப்படையாக பிரகடனப்படுத்தியது.

இதன் பயனாக காலம் காலமாக பெண்கள் மீது சுமத்தப்பட்டிருந்த அடிமைத்தளைகளையும், ஒடுக்குமுறைகளையும் ஒழித்து பெண்களைப் பாதுகாக்க, அவர்களின் வாழ்நிலை, கண்ணியம், பெண்களுக்கான தனித்த தேவைகளை பாதுக்க உரிமைகள் போன்றவற்றை அங்கீகரித்து, பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவது உள்ளிட்ட ஏராளமான அம்சங்களை இந்திய அரசியல் சாசனம் இந்திய பெண்களுக்கு உறுதி செய்துள்ளது.

பெண்களின் அரசியல் சாசன உரிமைகளை நடைமுறைப்படுத்த இந்திய நாடாளுமன்றமும், தமிழ்நாடு சட்டப்பேரவையும் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றன.

பெண்களுக்கான சொத்துரிமை, இந்து திருமணச் சட்டத்தில் சீர்திருத்தம் போன்ற ஏராளமான விஷயங்கள் துவங்கி, பெண் கல்வி, பெண்களுக்கான வேலை வாய்ப்பு, பணியிட பாதுகாப்பு, பெண்கள் நலன்களில் தனிப்பட்ட கவனம் செலுத்தும் வகையில் அரசுப் பணிகளில் பெண்களுக்கான 30% இடஒதுக்கீடு, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு, பெண்களுக்கான


சிறப்பு தொழில்முனைவோர் திட்டம், சிறு தொழில் கடன் திட்டம், பெண்களின் உயர்கல்வியை ஊக்குவிக்க புதுமைப் பெண் திட்டம்,, அனைத்து மகளிர் காவல் நிலையம், பெண் சிசுக்களை பாதுகாக்க தொட்டில் குழந்தைகள் திட்டம், விதவைகள் மறுமண ஊக்கத் தொகை, கலப்புத் திருமண ஊக்க தொகை, பேறு கால மகளிருக்கான உயரிய ஆரோக்கியம் மற்றும் மருத்துவ உதவி திட்டஙள், மகளிர் திட்டம், என ஏராளமான சமூக மேம்பாட்டு திட்டங்களை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி இவற்றின் பயனாக இன்றைய உலகமயச் சூழலில் பெருகிவரும் கல்வி, வேலை, சமூக, அரசியல், பொருளாதார வாய்ப்புகளை ஆண்களுக்கு நிகராக பயன்படுத்தி பெண்கள் முன்னேற, சாதனைப் படைக்க வாய்ப்புகளை உருவக்கிக் கொடுத்துள்ளன.

இந்த கையேட்டில் பெண் விடுதலைக்கும், பாலின சமத்துவத்திற்கும், பெண்களை பாதுகாப்பிற்கும் இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படையில் நாடாளுமன்றமும், தமிழ்நாடு சட்டமன்றமும் இயற்றியுள்ள சட்டங்கள் குறித்து சுருக்கமாக அறிமுகப்படுத்த முயற்சித்துள்ளோம்.

இந்த சட்ட விழிப்புணர்வு கையேட்டினை பெண்களுக்கான உரிமைகளையும், பாதுகாப்பினையும் உறுதிப்படுத்த சட்டங்களில் உள்ள முக்கிய கூறுகளின் அறிமுகத்திற்காகவே உங்கள் கைகளில் தவழக் கொடுத்துள்ளோம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பெண்களுக்கான அரசியல் சாசன உரிமைகள் | 08 |
| 2. | பெண்களுக்கான சொத்துரிமை சட்டங்கள் | 11 |
| 3. | திருமண உறவு சட்டங்கள் | 12 |
| 4. | வரதட்சணைத் தடுப்பு சட்டம் | 16 |
| 5. | குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் | 18 |
| 6. | தமிழ்நாடு பெண்கள் தொல்லை செய்தல் தடுப்புச் சட்டம் | 21 |
| 7. | குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் | 24 |
| 8. | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் | 27 |
| 9. | மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டம் | 29 |
| 10. | உணவு பாதுகாப்புச் சட்டம் | 30 |
| 11. | பெண்களும் தொழிலாளர் சட்டங்களும் | 31 |
| 12. | பெண்களும் நிறுவனச் சட்டமும் | 33 |
| 13. | தமிழ்நாடு விடுதிகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டம் | 34 |
| 14. | பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை (தவிர்த்தல், தடை செய்தல் மற்றும் நிவாரணமளித்தல்) சட்டம் | |
| 15. | இந்திய தண்டணைச் சட்டப் பாதுகாப்புகள் | 37 |
| 16. | தனது உடலின் மீதான பெண்களின் உரிமைகள் | 38 |
| 17. | பெண்களை அநாகரீகமாக பிரதிநிதித்துவப்படுத்தல் (தடுப்பு) சட்டம் | 40 |
| 18. | குற்றவியல் திருத்தச் சட்டம் | 41 |
| 19. | காவல்துறையின் கடமைகள் | 42 |
| 20. | தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் பணிகள் | 43 |
| 21. | தமிழ்நாடு சட்ட சேவைகள் மையம் | 45 |
| 22. | மிகக்கடுமையான குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தேசிய மகளிர் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிவாரணப் பட்டியல் | 47 |




# 1
# பெண்களுக்கான அரசியல் சாசன உரிமைகள்

இந்திய அரசியல் சாசனம் சமூகத்தின் அனைத்து பகுதியினரின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் வழிவகை செய்யப்பட்ட சமூக நீதி ஆவணமாகும். நமது அரசியல் சாசனமானது உலகில் எழுதப்பட்ட அனைத்து அரசியல் சாசனங்களிலேயே மிகவும் நீளமானது ஆகும். நமது அரசியல் சாசனத்தில் ஒரு முகப்புரை, 25 பாகங்கள், 12 அட்டவணைகள், 5 பிற்சேர்க்கைகள், 448 உறுப்புகள் மற்றும் 101 திருத்தங்களுடன் இன்றளவும் திறம் செயல்பட்டு வருகிறது.

**அரசியல் சாசனம் உறுதிப்படுத்தியுள்ள பெண்களுக்கான உரிமைகள்**

மனிதர்கள் இயல்பாகவே உரிமைகளோடுதான் பிறக்கிறோம். ஆனால், சமூகத்தின் சூழல்கள் காரணமாக அத்தகைய உரிமைகளை அரசியல் சாசனம் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் அத்தகைய அரசியல் சாசன உறுப்புகளைப் (Articles) பார்ப்போம்.

**உறுப்பு – 14 :**

சட்டத்தின் முன் அனைவரும் சமம். பாகுபாடுகளுக்குத் தடை.

**உறுப்பு – 15, 15 ( 1 ) மற்றும் ( 2 ) :**

மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் எவர் ஒருவர் மீதும் பாகுபாடுகள் காட்டப்படக் கூடாது.

**உறுப்பு – 15 ( 3 ) :**

பெண்களையும், குழந்தைகளையும் ஆற்றல்படுத்துவதற்கான சிறப்பு அதிகாரங்களை அரசுக்கு வழங்குகிறது.

**உறுப்பு – 16 :**

அரசு வேலைவாய்ப்புகளில் அனைத்து குடிமக்களுக்கும் சமவாய்ப்பு.

**உறுப்பு – 16 ( 2 ) :**

வேலை வாய்ப்பில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் காட்டத் தடை

**உறுப்பு – 21 :**

உயிருக்கும், உடல்சார் உரிமைக்கும் பாதுகாப்பு

**உறுப்பு – 21 A :**

கல்வி கற்பதற்கான உரிமை

**உறுப்பு – 23 :**

மனிதர்களை வணிகப் பொருளாக்குதல், வலுக்கட்டாயமாக வேலை சுமத்துதல் ஆகியவற்றிற்கு தடை.

**உறுப்பு – 24 :**

தொழிற்சாலைகள் முதலியவற்றில் சிறார்களை வேலையமர்த்தும் செயலுக்குத் தடை.

**உறுப்பு – 39 :**

ஆண், பெண் இருபாலரும் சரிநிகராக வாழ்வாதாரங்களை பெற உரிமை உள்ளவர்கள். கல்வி, மருத்துவம், நல்வாழ்வு போன்றவற்றில் சமவாய்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் அரசின் கொள்கைகள் நலஞ்சார் முறையிலும், சுதந்திரமும் கண்ணியமும் வளர்ச்சியுறும் விதத்திலும் அமைய வேண்டும்.

**உறுப்பு – 39 (A):**

சமநீதியும், இலவச சட்ட உதவியும்



அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வசித்த பெண் உறுப்பினர்கள்

**உறுப்பு – 42 :**

*நியாயமான மற்றும் மனிதாபிமான வேலை நிலைமைகள் மற்றும் மகப்பேறு நிவாரணம் ஆகியவற்றை வழங்க வழிவகை செய்தல்.*

**உறுப்பு - 46 :**

*நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் தேவையை கருத்தில் கொண்டு பெண்களுக்கான வேலை வாய்ப்புகளையும், கவுரவமான பணிச் சூழலையும் உருவாக்க வேண்டும்.*

**உறுப்பு – 51(A) (e) :**

*பெண்களின் மாண்பை இழிவுபடுத்தும் அனைத்து இழிவான பழக்க வழக்கங்களையும் குடிமக்கள் விட்டொழிக்க வேண்டும்.*

**உறுப்பு – 243–D (2) மற்றும் உறுப்பு– 243 – T (2) :**

*ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு.*

**உறுப்பு – 326 :**

*வயது வந்த அனைவருக்கும் பாலின பாகுபாடின்றி வாக்குரிமை.*

*இதுபோன்ற பல்வேறு உறுப்புகளின் (Articles) மூலம் பொதுவாகவும், குறிப்பாக பெண்களுக்கெனவும் நமது அரசியல் சாசனம் ஏராளமான உரிமைகளை உறுதிப்படுத்தியுள்ளது.*

# 2
# பெண்களும் சொத்துரிமை சட்டங்களும்...

*நமது நாட்டில் வரலாறு நெடுகிலும் பெண் ஒரு அடிமையாகவும், எந்த உரிமைகளுமற்றவளாக ஒடுக்கப்பட்டே வந்திருக்கிறாள். இந்தியாவில் ஆங்கிலேயர்கள் காலத்தில் இயற்றப்பட்ட ''திருமணமான பெண்களின் சொத்து சட்டம் 1874'' தான் முதன் முதலில் பெண்களின் சுய சம்பாத்திய சொத்துக்கள் யாவும் சம்பாதித்த பெண்ணைக்கே உரியது என்று அறிவித்தது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பல்வேறு சமூக சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் பெண்ணுரிமை போராட்டங்களாலும், அரசியல் சாசனம் பலின பாகுபாட்டை ஒழித்துக்கட்டியதின் பயனாகவும் பெண்களின் சொத்துரிமை அங்கீகரிக்கப்பட்டு பெண்களின் சொத்துரிமையை உறுதிப்படுத்தும் சட்டங்கள் இயற்றப்பட்டன.*

**திருமணமான பெண்களின் சொத்து சட்டம், 1874**

*திருமணமான பெண்கள் தங்களது சுய சம்பாத்தில் சேர்த்த அனைத்துவிதமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களுக்கு அந்த பெண் தான் உரிமையாளர் என்று அறிவித்தது.*

**இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956**

*இந்த சட்டத்தில் பெண்களுக்கான சொத்தில் பங்கு கோரும் உரிமையை அங்கீகரித்திருந்தாலும், பெண்ணின் பாகத்தை அவள் நிறைவாகவும், முழுமையாகவும் அனுபவிக்கும் உரிமையற்ற வளாகவே இருந்தால்.*

*இந்த சட்டத்தில் தமிழ்நாடு அரசு திருத்தம் கொண்டு வந்து "இந்து வாரிசுரிமை (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 1989ஐ கொண்டு வந்து சொத்தில் ஆணுக்கு பெண் நிகரான உரிமை படைத்தவள் என்பதை உறுதிபடுத்தியது. தமிழ்நாட்டு பெண்களுக்கு 1989-ல் கிடைத்த சொத்துரிமையை 2005-ல் இந்தியா பாராளுமன்றம் பெண்களுக்கான சொத்துரிமையை அங்கீகரித்து திருத்தங்களைக் கொண்டு வந்தது. வினித் சர்மா எதிர் ராகேஷ் சர்மா மற்றும் பலர் (2020) 9 SCC 1 என் வழக்கின் மூலம் இந்தியாவின் அனைத்து பெண்களும் சொத்தில் சமஉரிமை உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.*

*இந்த சட்டத்தின் படி ஒரு குடும்பத்தில் உள்ள பெண்கள் அனைவருக்கும் குடும்ப சொத்துக்களில் ஆணுக்கு நிகரான சம பங்கு பெற உரிமையுள்ளது.*

**இசுலாமிய பெண்களின் சொத்துரிமை:**

*ஷரியத் சட்டம், 1938ல் இசுலாமிய பெண்களின் சொத்துரிமையை ஷரியத் சட்டம் 1937-ல் விவரிக்கப்பட்டுள்ளது.*

**இந்திய வாரிசுரிமை சட்டம் – 1925**

*கிருஸ்தவ, பார்சி மற்றும் சிறப்பு திருமண சட்டத்தின் படி திருமணம் செய்து கொண்ட பெண்களின் சொத்துரிமையை இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925ல் விவரிக்கப்பட்டுள்ளது.*

# 3
# திருமண உறவு சட்டங்கள்



*இந்திய அரசியல் சாசனம் மத சுதந்திரத்தை உறுதிபடுத்துகிறது. சமய சார்பற்ற நாடான இந்தியா தனது மக்களை அவரவர் மத நம்பிக்கைகளை பின்பற்ற அனுமதிக்கிறது. இந்தியாவில் திருமணம், வாரிசுரிமை, விவாகரத்து போன்ற தனிப்பட்ட விஷயங்களில் தீர்வுகான ஒவ்வொரு சமய பின்பற்றாளர்களுக்கும் தனித் தனியே சட்டங்கள் இயற்றப்பட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன. அதே போல் சமய மறுப்பாளர்கள், சமயம் சாராதவர்கள் போன்றவர்களுக்கு தனியான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றை சுருக்கமாக பார்ப்போம்.*

**அ.இந்து திருமணச் சட்டம், 1955**

- *இந்தச் சட்டம், இந்தியாவில் வாழும் இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்த மற்றும் ஜைன மதத்தினருக்காக இயற்றப்பட்டது.*

- **சட்டப் பிரிவு 5 :** மணமகன் மற்றும் மணமகள் இருவரும் இந்துக்களாக இருக்க வேண்டும். ஆணிற்கு 21 வயதும், பெண்ணிற்கு 18 வயதும் பூர்த்தியாகி இருக்க வேண்டும் போன்ற நிபந்தனைகளை இந்து திருமணத்தின் அடிப்படைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன.
- **சட்டப்பிரிவு 7A:** சம்பிரதாயங்கள் ஏதுமின்றி சீர்திருத்த சுயமரியாதை திருமணங்கள் சட்டப்படி செல்லும்
- **சட்டப்பிரிவு 9:** தகுந்த காரணமில்லாமல் கணவனோ, மனைவியோ பிரிந்து சென்றுவிடும்போது பாதிக்கப்பட்ட நபர் பிரிந்து சென்ற நபரை தன்னோடு சேர்ந்து வாழக் கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யலாம்.
- **சட்டப்பிரிவு 10:** விவாகரத்து பெறாமல் நீதிமன்ற உத்தரவின் மூலம் பிரிந்து வாழ்தல்.
- **சட்டப்பிரிவு 13:** விவாகரத்து பெறும் வழிமுறைகளை விவரிக்கிறது.
- **சட்டப்பிரிவு 13b :** கணவன், மனைவி சேர்ந்து வாழ முடியாத நிலையில் இருவரும் மனமொத்து மனுத்தாக்கல் செய்து விவாகரத்து பெறலாம்.
- **சட்டப்பிரிவு 14 :** இந்து திருமணச் சட்டத்தில் திருமணமாகி ஒரு வருடம் முடிந்த பிறகே விவாகரத்து கோர முடியும்.

**இடைக்கால வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்)**

- சட்டப்பிரிவு 24 - வழக்கு நிலுவையில் உள்ள போது மனைவி - தன்னையும், குழந்தைகளையும் - பராமரித்துக்கொள்ள கனவரிடம் மாதாந்திர வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்) கோரலாம்.

**நிரந்தர வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்)**

- சட்டப்பிரிவு 25 - மனைவி (தன்மையும், குழந்தைகளையும்) பராமரித்துக் கொள்ள நிரந்தர வாழ்க்கைப் பொருளுதவிக்கு (Permanent Alimony) மனுச் செய்ய வாய்ப்பளிக்கிறது.

**குழந்தைகளின் இடைக்கால பொறுப்பு**

- சட்டப்பிரிவு 26 - குழந்தைகளின் இடைக்கால பொறுப்பு கோரி மனு செய்ய வழிவகை உள்ளது.

**சீதனப் பொருட்களைத் திரும்பப் பெறுதல்**

- சட்டப்பிரிவு 27 - கணவன் வீட்டில் விட்டு வந்த நகைகள் மற்றும் சீதனப் பொருட்களை திரும்பப் பெற இடைக்கால மனு செய்ய வழிவகை உள்ளது.

**ஆ.இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம், 1872**

*நம் நாட்டில் வாழும் கிறிஸ்தவ மக்களுக்காக இச்சட்டம் இயற்றப்பட்டது. ஆண், பெண் இருவரும் கிருஸ்துவராகவோ அல்லது இருவரில் ஒருவர் கிறிஸ்துவராகவோ இருப்பின் இச்சட்டத்தின் கிழ் திருமணம் செய்யலாம்.*

*இந்த சட்டத்தின் படி நடைபெறும் ஒவ்வொரு திருமணமும் இந்த சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி திருமணப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.*

*மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியாகி இருத்தல் போன்ற நிபந்தனைகளை திருமணத்திற்கான அடிப்படைகளாக இந்த சட்டம் வரையறுத்துள்ளது.*

*இந்திய கிருஸ்தவ சட்டத்தின் கீழ் திருமனம் செய்துகொள்ளும் தம்பதிகளின் சேர்ந்து வாழ்தல், விவாகரத்து, வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்) போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கான பரிகாரங்களையும் இந்திய விவாகரத்து சட்டம் 1869-ன் கீழ் பெற்றுக் கொள்ள வேண்டியது.*

**இ.பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் 1936**

*இந்த சட்டமானது இந்தியாவில் வாழும் பார்சி சமய மக்களின் திருமணம், விவாகரத்து, குழந்தைகள் பொறுப்பு, வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்) போன்ற பரிகாரங்களை பெற வழிவகுக்கிறது.*

**உ.முஸ்லீம் இனமுறை சட்டம் (ஷரியத்) பொருந்தச் செய்தல் சட்டம் 1937:**

*இசுலாமியர்களின் சொத்துரிமை, திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை போன்ற அனைத்து தனி உரிமைகளும் இந்த சட்டத்தின் படியே பரிகாரம் பெற முடியும்.*

**ஊ.முஸ்லீம் மணஉறவு தீர்தல் சட்டம், 1939:**

*இந்த சட்டத்தின் படி இசுலாமியப் பெண்கள் உரிய நீதிமன்றத்தில் மனு செய்து திருமணத்தை ரத்து செய்யக் கோர உரிமை உள்ளது.*

**எ.முஸ்லீம் பெண்கள் (மணமுறிவு மீதான உரிமைகள்) பாதுகாப்பு சட்டம், 1986**

***மொகமத் அஜீஸ் எதிர் ஷா பானு (1985 (2) SCC 556)** என்ற வழக்கில் இசுலாமிய பெண்களுக்கு விவாகரத்து செய்யும் கணவரிடமிருந்து வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்) பெற உரிமையுள்ளது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து விவாகரத்தாகும் இசுலாமியப் பெண்களின் உரிமைகளை வரையறுத்து இந்த சட்டம் இயற்றப்பட்டது.*

இந்த சட்டத்தின் படி மணமுறிவின் போது வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்), மஹர் மற்றும் இதர பொருட்களை இசுலாமிய பெண்கள் தமது கணவரிடமிருந்து திரும்பப்பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

» சட்டப் பிரிவு 3 - மணமுறிவின் போது பெண்ணிடம் இருந்து பெறப்பட்ட மஹர் மற்றும் இதர பொருட்களையும் கணவன் பெண்ணிடம் ஒப்படைத்துவிட வேண்டியது.

» சட்டப்பிரிவு 4 - இதாத் காலத்திற்கு பின் விவாகரத்தான இசுலாமியப் பெண் தன்னை பராமரித்துக் கொள்ளும் வசதியற்றிருக்கும் பட்சத்தில் அந்த பெண் அடுத்த திருமணம் செய்து கொள்ளும் வரையில் அவருக்கு பராமரிப்பு தொகை வழங்குவது கணவனின் கடமையாகும். பராமரிப்பு தொகை கேட்டு உரிய நீதிமன்றத்தில் மனு செய்து பரிகாரம் பெறுவதற்கான உரிமை அனைத்து விவாகரத்தான இசுலாமியப் பெண்களுக்கும் உள்ளது.

**ஏ.சிறப்பு திருமணச் சட்டம், 1954**

» மாற்று மதங்களைச் சார்ந்த ஆண், பெண் இருபாலரும் இந்த சட்டத்தின் படி தான் திருமணம் செய்ய வேண்டும்.

» மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியாக இருக்க வேண்டும் போன்ற நிபந்தனைகளை திருமணம் செய்து கொள்வதற்கான அடிப்படைகளாக இந்த சட்டம் வரையறுக்கிறது.

» இந்த சட்டத்தின் படி திருமணம் செய்யும் தம்பதிகள், சார் பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற இருக்கும் திருமணம் குறித்து 30 நாட்கள் முன் உரிய படிவத்தில் அறிவிப்பு செய்ய வேண்டும்.

» 30 நாட்களுக்குள் ஆட்சேபனை ஏதும் இல்லையெனில் திருமணம் பதிவு செய்யப்படும்.

» சேர்ந்து வாழ்தல், விவாகரத்து, வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்) போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கான பரிகாரங்களையும் இந்த சட்டத்தின் படியே கோரலாம்.

**ஐ.தமிழ்நாடு திருமண பதிவுச் சட்டம் – 2009**

» பெருகிவரும் திருமணங்கள் குறித்த சிக்கல்களை நெறிபடுத்தும் வகையில் திருமணங்களை கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்ற தேவையிலிருந்தே இந்த சட்டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தியது.

» சிறப்பு திருமணச் சட்டத்தைத் தவிர்த்து வேறு எந்த மதவழக்கப்படி திருமணம் நடைபெற்றாலும், இந்த சட்டத்தின் படி கட்டாயம் திருமணத்தை பதிவு செய்ய வேண்டும்.

» திருமணத்தை பதிவு செய்ய மறுத்தல், தவறான தகவல்களை கொடுத்தல் அல்லது திருமண பதிவேட்டில் முறைகேடாக திருத்தங்களை செய்தல் போன்ற செயல்களுக்கு அபராதம் மற்றும் சிறை தண்டனையை இந்த சட்டம் வரையறுத்துள்ளது.

**ஒ.சட்டப்பிரிவு 125 குற்றவியல் நடைமுறைச் சட்டம்**

இந்த சட்டப் பிரிவானது மதவேற்றுமை இல்லாமல் அனைத்து பெண்களுக்கும் பொருந்துவதாகும். மனைவி, பெற்றோர், திருமணமாகாத மகள், இளவல் மகன், ஆகிய அனைவரும் இந்த பிரிவின் கீழ் தந்தை, கணவன், சகோதரன் ஆகிய தங்களை பராமரிக்கும் கடமை பெற்ற ஆண்களிடமிருந்து வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்) தொகை கோரி நீதிமன்றத்தில் மனு செய்து பரிகாரம் பெறுவதற்கான உரிமை.

# 4
# வரதட்சணைத் தடுப்பு சட்டம் – 1961

வரதட்சணை என்ற ஆணாதிக்க பேராசையால் எண்ணற்ற பெண்களின் உயிர் பறிக்கப்பட்டு, உடல் ஊனப்பட்டு, மனநிலை பாதிக்கப்பட்டு, ஆதரவற்றவர்களாக, வாழ்க்கையிழந்தவர்களாக அவதியுற்றள்ளனர். இந்த சமூக இழி வழக்கமானது பிந்தைய வேத காலத்திலிருது தான் இந்திய துனைக் கண்டத்தில் வழக்கத்திற்கு வந்தது. கால மாற்றத்திற்கேற்ப வரதட்சணையின் தன்மையும் மாறிக்கொண்டே வந்திருக்கிறது. இன்றைய சூழலில் வரதட்சனை கேட்பது என்பது “உங்களுக்கு தெரியாதா? நீங்க என்ன உங்க பொண்ண வெருங்கையோடா அனுப்பிடப் போறீங்க....” என்ற நளினமான வடிவத்தை அடைந்திருக்கிறது.

வரதட்சணை என்ற இந்த இழி வழக்கத்தை ஒரு சமூகக் குற்றம் என்று “வரதட்சணை தடுப்புச் சட்டம்-1961" அறிவித்ததோடு வரதட்சணை கொடுப்பதும், வாங்குவதும் தண்டனைக்குறிய குற்றம் என்றும் அறிவித்தது. மாறிவரும் சமூக எதார்த்தங்களுக்கு ஏற்ப, சமூக தேவைகளுக்கு ஏற்ப இந்த சட்டம் 1984 மற்றும் 1986



ஆண்டுகளில் திருத்தப்பட்டதோடு, வரதட்சணை தடுப்பு (மணமகன் மற்றும் மணமகளின் பரிசு பொருட்களின் பட்டியலைப் பராமரித்தல்) விதிகள் 1985ல் உருவாக்கப்பட்டது. இந்த சட்டத்தின் படி

- திருமணத்தின் போதோ அதற்குப் பின்னரோ, நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒருதரப்பு மறுதரப்புக்கு திருமணத்திற்காக கொடுக்கப்படும் பணம், பொருள், விலைமதிப்பு வாய்ந்த அனைத்தும் வரதட்சணை எனப்படும்.
- வரதட்சணை கொடுப்பது அல்லது வாங்குவது மற்றும் வரதட்சணை கொடுக்க அல்லது வாங்க உடந்தையாக இருப்பது ஆகியவை 5 ஆண்டுகளுக்கு குறையாமல் சிறை மற்றும் ரூ. 15000/-அல்லது வரதட்சணை மதிப்பிற்கு ஈடான தொகை, இவற்றில் எது அதிகமோ அந்த அளவு அபராதத்துடன் கூடிய தண்டனைக்குறிய குற்றமாகும்.
- திருமணத்தின் போது இரு தரப்பினருக்கும் வழங்கப்படும் பரிசுப் பொருட்களின் பட்டியலை தயார் செய்து பாதுகாப்பு அதிகாரியின் சான்று பெற்று இருதரப்பினரு ஒரு அசல் பிரதி பராமரிக்க வேண்டும். இதை செய்ய தவறுவது 3 ஆண்டுகள் வரை தண்டனை வழங்கத்தக்க குற்றமாகும்.
- திருமணத்தின் போது பெண்ணுக்கு வழங்கப்படும் வரதட்சணை பெண்ணுக்கு மட்டுமே உரியது.
- வரதட்சணை கொடுப்பதாகவோ, வாங்குவதாகவோ போடப்படும் எந்த ஒப்பந்தமும் செல்லாது.

# 5
# குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் – 2005



குடும்பங்களில் பெண்களுக்கு எதிராக உடல் ரீதியான வன்முறையாக மட்டுமல்லாமல், மனரீதியான, உணர்ச்சி பெருக்கான / வசைச் சொற்கள் மூலமாக, பாலியல் ரீதியானதாக, பொருளாதார ரீதியான நடத்தப்படுகின்ற வன்முறைகளையும் வன்கொடுமைகள் தான் என்று இந்த சட்டம் அறிவிக்கிறது.

- கணவன் மற்றும் அவரது உறவினர்கள் மற்றும் திருமணம் செய்யாமலே சேர்ந்து வாழும் ஆண் துணைவர் அல்லது அவருடைய உறவினர்களால் செய்யப்படும் வன்முறைகளிலிருந்தும் மனைவி, பெண் துணைவர் அல்லது அந்த குடும்பத்திலுள்ள பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் இந்த சட்டம் பாதுகாப்பு வழங்குகிறது.
- ஒரு பெண்ணை வீட்டைவிட்டு விரட்டுவதை தடுக்கும் வகையில் பெண்களுக்கு தாங்கள் வசிக்கும் வீட்டில் தொடர்ந்து வசிக்கும் உரிமையை இந்த சட்டம் பாதுகாக்கிறது.
- வீட்டிலிருந்து எதிராளியை வெளியேற்றவும் அல்லது மாற்று தங்குமிடம் பெறவும் அல்லது அதற்கான வாடகையை எதிராளியே செலுத்துவதற்கும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இந்த சட்டம் வழிவகை செய்கிறது.
- பாதிக்கப்பட்ட பெண்கள் தமது குடும்பத்தில் இருக்கும் எந்த ஆண் வன்முறையாளர் மீதும் இந்த சட்டத்தின் கீழ் வழக்கு

பதிவு செய்யலாம். கணவன், அவரது உறவினர்கள் மற்றும் ஆண் துணைவன் ஆகியோரையும் வழக்கில் எதிராளிகளாக சேர்த்து தீர்வு காணலாம்.

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- பெண்ணிற்கு தனது கணவன் வீட்டில் பகிர்ந்து வசிக்கும் உரிமையை உறுதி செய்கிறது.
- பொருளாதார வன்முறையை அங்கீகரிப்பதன் மூலம் பொருளாதார நிவாரணத்தை உறுதி செய்கிறது.
- உணர்ச்சி பெருக்கான / வசைச் சொற்கள் மற்றும் மனரீதியான வன்முறையை அங்கீகரிக்கிறது.
- குழந்தையின் தற்காலிக பாதுகாப்பு பொறுப்பை தாயிடம் வழங்குகிறது.
- வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 60 நாட்களுக்குள் தீர்ப்புகள்.
- ஒரே வழக்கில் பல தீர்ப்புகள்
- தரப்பினரிடையே மற்ற வழக்குகள் நிலையில் இருந்தாலும் இச்சட்டத்தின் கிழ் வழக்குகள் பதிவு செய்யப்படலாம்.

**கிடைக்கும் தீர்வுகள்**

| | |
|---|---|
| » சட்டப் பிரிவு 18 | பாதுகாப்பு ஆணை |
| » சட்டப் பிரிவு 19 | திருமணமான வீட்டில் வசிப்பதற்கான ஆணை |
| » சட்டப் பிரிவு 20 | தனக்கும் தன்னுடைய குழந்தைகளுக்கும் பராமரிப்பு உள்ளிட்ட பண ஆணைகள். |
| » சட்டப் பிரிவு 21 | குழந்தைகளின் தற்காலிக பாதுகாப்பு பொறுப்பு |
| » சட்டப் பிரிவு 22 | பெண்ணுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு ஆணை |

**பாதுகாப்பு அலுவலர்கள்**

பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் அல்லது குடும்ப வன்முறையில் ஈடுபட்ட மற்றும் மனுதாரருடன் குடும்ப உறவில் இருக்கும் ஆண்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய, அரசால் பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்றத்தை அணுகி சட்ட உதவிகளை பெறுவதற்கு, பாதுகாப்பு அலுவலர் உதவி செய்கின்றனர். மேலும், இந்த சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பெண்கள் நேரடியாக நீதிமன்றத்

திலோ, அருகமைக் காவல் நிலையத்திலோ அல்லது பாதுகாப்பு அதிகாரியிடமோ தங்களுக்கு எதிரான குடும்ப வன்முறை குறித்த புகார் செய்யலாம்.

**சேவை வழங்குபவர்கள்:**

அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் சேவை வழங்குபவர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. சேவை வழங்குநர்கள் பாதிக்கப்பட்ட பெண்கள் வன்முறை நடைபெற்ற அறிக்கையைத் தாக்கல் செய்யவும், அவர்கள் குழந்தைகளுடன் குறுகிய கால தங்கும் இல்லங்களில் தங்குவதற்கும், அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும், தேவைப்பட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சை பெறுவதற்கும் உதவுகின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் நிலையான வருமானம் ஆகியவற்றைப் பெற உதவும் வகையில் தொழில் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கின்றன.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நிவாரணம் கிடைப்பதில் அனைத்து பங்காற்றாளர்களும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

**1. குடும்ப வன்முறை என்றால் என்ன?**

ஒரு கூரையின் கீழ் தந்தை, சகோதரன், தனயன் மற்றும் கணவன், கணவனது உறவினர்கள் அல்லது கணவர் போன்ற உறவுடன் வாழும் ஆண், பெண் இவர்களில் பெண் வன்முறைக்கு ஆளானால் அது குடும்ப வன்முறை எனப்படும்.

**2. யாரிடம் புகார் கொடுக்கலாம்?**

1) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் பாதுகாப்பு அதிகாரியிடம் புகார் கொடுக்க வேண்டும்.

2) காவல் நிலையத்திலோ, இலவச சட்ட உதவி மையத்திலோ புகார் கொடுக்கலாம். அந்தப் புகார் பாதுகாப்பு அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

**3. என்னென்ன உத்தரவுகள் பெறலாம்?**

1) வன்முறையைத் தடுக்கும் உத்தரவு

2) வன்முறையிலிருந்து பெண்ணைப் பாதுகாக்கும் உத்தரவு.

**4. இச்சட்டத்தின் மூலம் என்ன நிவாரணம் பெறலாம்?**

1) மருத்துவ உதவித் தொகை

2) பொருட்சேதத்துக்கான உதவித் தொகை

*3) மனநல ஆலோசனை*

*4) ஊதிய இழப்பு நேர்ந்திருந்தால் அதற்கான இழப்பீடு*

*5) குடியிருக்கும் வீட்டிற்கான வாடகை மற்றும் வாடகை முன்பணம்.*

*6) வாழ்க்கை பொருளுதவி (ஜீவனாம்சம்)*

**5. சட்டத்தின் சிறப்பம்சம்**

*1) கணவன் வீட்டில் வாழ்வதற்கான உரிமையை உத்திரவாதப்படுத்தப்பட்டுள்ளது.*

*2) மைனர் (இளவர்) குழந்தைகயின் பாதுகாவளர் உரிமையை தற்காலிகமாக தாயிடம் வழங்கப்படுகிறது.*

**6.தண்டனை**

*மாஜிஸ்டிரேட் பிறப்பிக்கும் உத்தரவை வன்முறையாளர் மதித்து நடக்கத் தவறினால் ஒரு வருடம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது ரூ.20,000 வரையிலான அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படும்.*

● ● ● ● ● ●

# 6
# தமிழ்நாடு பெண்கள் தொல்லை செய்தல் தடுப்புச் சட்டம், 1998

*1998- ஆண்டு சென்னையில் கல்லூரி மாணவி கேலிவதையின் (Eve Teasing) காரணமாக மரணமடைந்தார். இந்த சம்பவத்தை தொடர்ந்து தமிழ்நாட்டில் நடைபெற்ற தீவிரமான போராட்டங்களின் விளைவாக "தமிழ்நாடு கேலிவதை தடுப்புச் சட்டம் - 1998" இயற்றப்பட்டது. இந்த சட்டத்தை மேலும் வலுப்படுத்தி "தமிழ்நாடு பெண்கள் மீதான தொல்லை செய்தல் தடுப்பு (திருத்த) சட்டம், 2002 இயற்றப்பட்டது.*

**இந்த சட்டத்தின் படி**

- *எந்தவொரு இடத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தடை செய்யப்பட்டுள்ளது.*
- *கல்விக் கூடம், கோவில் அல்லது பிரார்த்தனைக்கான இடம், பேருந்து நிறுத்தம், சாலை, ரயில் நிலையம், திரையரங்கு, பூங்கா, கடற்கரை, திருவிழா நடைபெறும் இடம், அரசு*



வளாகங்கள் அல்லது வேறு எந்தவொரு இடத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடும், தூண்டிவிடும், வன்முறை செய்யும் நபருக்கு ரூ.10,000/-க்கு குறையாமல் அபரதத்துடன் கூடிய மூன்று ஆண்டுகள் வரையிலான சிறை தண்டனையும் விதிக்கப்படும்.

**வன்முறையால் மரணம்:**

- பெண் சீண்டல் எனும் வன்முறையால் உடற்காயம் ஏற்பட்டு அதன் காரணமாக மரணம் நேர்ந்தால் அந்த மரணம் சித்திரவதை மரணம் என்று அழைக்கப்படும்.
- மரணம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உடற்காயம் ஏற்படுத்தி அதனால் மரணம் நிகழ்ந்தால் ஆயுள்தண்டனை மற்றும் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.
- மரணம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலே மரணமடையும் வகையில் உடற்காயம் ஏற்படுத்தி வன்முறை செய்தால் 10 வருடம் வரையிலான சிறைதண்டனை மற்றும் 50 ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் அபராதம் விதிக்கப்படும்.
- கவனக்குறைவாலோ அராஜகமான நடவடிக்கையாலோ மரணம் நிகழ்ந்தால் 10 வருடம் வரையிலான சிறை தண்டனை மற்றும் 25 ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் அபராதம் விதிக்கப்படும்.

**வன்முறையால் தற்கொலை.**

- *ஒரு பெண் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்னதாக, அவள் பெண் சீண்டல் எனும் வன்முறைக்கு ஆளாகியிருந்தால் அந்த மரணம் சித்திரவதையால் நடைபெற்ற மரணம் எனக் கருதி அதற்குக் காரணமானவருக்கு 10 வருடம் வரையிலான சிறைதண்டனை மற்றும் 50 ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் அபராதம் விதிக்கப்படும்.*

**நிர்வாகத்தின் கடமை;**

- *கல்விக்கூடம், கோவில் மற்றும் பிரார்த்தனைக்கான இடங்கள், திரையரங்கம் போன்ற எந்த இடத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறை நிகழாமல் தடுக்க வேண்டும்.*
- *அவ்வாறு செய்யத் தவறும் உரிமையாளர் / பொறுப்பாளர் மீது ரூ. 2,000/- ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.*

**பொதுப்பணி வாகனங்களில் பணி புரிவோர் கடமை**

- *வன்முறை குறித்து புகார் வந்தால் உடனடியாக வாகனத்தை காவல் நிலையத்திற்கு செலுத்த வேண்டும். காவல் துறைக்கு தகவல் கொடுத்தல்*
- *அவ்வாறு செய்யத்தவறும் ஓட்டுநர், நடத்துநர் மீது ரூ.1,000/- அபராதம் விதிக்கப்படும்.*

**இழப்பீடு உத்தரவு**

- *பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு, உடற்காயம், மனவேதனை உள்ளிட்டவற்றுக்கு குற்றம் இழைத்தவர் இழப்பீடு கொடுக்க வேண்டுமென உத்திரவு இடப்படும்.*

# 7
# குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் – 2006



இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவோ அல்லது பின்னரோ நடத்தப்பட்ட ஒவ்வொரு குழந்தைத் திருமணமும், திருமண சமயத்தில் குழந்தையாக இருந்து, ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்ற தரப்பின் விருப்பத்தின் பேரில் ரத்து செய்யக்கூடியதாக இருக்கும். முந்தைய சட்டங்களில் இருந்த குறைபாடுகளை சரி செய்வதற்காக, 2006 ஆம் ஆண்டு குழந்தைத் திருமண தடைச் சட்டத்தின் விதிகள் அறிமுகம் செய்யப்பட்டன. அது, 1929 ஆம் ஆண்டு குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்துக்கு மாற்றாக, நவம்பர் 1, 2007 இல் நடைமுறைக்கு வந்தது.

1978ஆம் ஆண்டு இந்த சட்டத்தில் பெண்களின் சட்டப்பூர்வ திருமண வயதை 15இல் இருந்து 18 வயதாகவும், ஆண்களுக்கு 18இல் இருந்து 21 வயதாகவும் உயர்த்துகின்ற திருத்தம் செய்யப்பட்டது. பெண் அல்லது ஆணுக்கு சட்டப்பூர்வ வயதை விடக் குறைவாக, அதாவது பெண்ணுக்கு 18 வயதுக்கு கீழ் அல்லது ஆணுக்கு 21 வயதுக்கு கீழ் உள்ள திருமணத்தை, குழந்தைகள் திருமணம் என குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் வரையறுக்கிறது. இந்த சட்டத்தின் விதிகள் குழந்தைத் திருமணத்தைத் தடை செய்கின்றன. பாதிக்கப்பட்டவருக்கு பாதுகாப்பையும், நிவாரணத்தையும் வழங்குகின்றன. மேலும், அத்தகைய திருமணத்துக்கு உடந்தையாக இருக்கின்ற, ஊக்குவிக்கின்ற அல்லது நடத்தி வைப்பவர்களுக்கான தண்டனையை அதிகரிக்கின்றன.

- திருமணம் நடைபெறும் சமயத்தில் குழந்தையாக இருந்த திருணத்தின் ஒரு ஒப்பந்த தரப்பு மட்டுமே, ரத்து செய்கின்ற உத்தரவு மூலம் அந்த குழந்தைத் திருமணத்தை ரத்து செய்வதற்கான மனுவை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.
- மனு தாக்கல் செய்யும் நேரத்தில் அந்த மனுதாரர் ஒரு இளவராக (மைனர்) இருந்தால், குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரியிடம் அவருடைய பாதுகாவலர் அல்லது அவருடைய பிரதிநிதியால் மனு தாக்கல் செய்யப்படலாம்.
- உரிய வயதை அடைந்த இரண்டு வருடங்களுக்குள் குழந்தை திருமணம் செய்யப்பட்ட நபரில் யாரேனும் இந்த விதிகளின் கீழ் மனு செய்யலாம்.
- இந்தப் பிரிவின் கீழ் ஒரு ரத்து செய்யும் உத்தரவை வழங்கும் வேளையில், மாவட்ட நீதிமன்றம் மற்றொரு தரப்புக்கு, அவருடைய பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு, ஒருவேளை இருக்கும் பட்சத்தில் அடுத்த தரப்பிடம் இருந்து திருமணம் நடைபெறும் சமயத்தில் அவர்கள் பெற்றுக் கொண்ட பணம், விலையுயர்ந்த பொருட்கள், ஆபரணங்கள் மற்றும் பிற பரிசுப் பொருட்களை அல்லது அந்த விலை உயர்ந்த பொருட்கள், ஆபரணங்கள், பிற பரிசுப் பொருட்கள் மற்றும் பணத்துக்கு இணையான தொகையைத் திரும்பப்பிக் கொடுக்குமாறு, அந்த திருமணத்தின் இரண்டு தரப்பு அல்லது அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு ஆணை பிறப்பிக்கும்.
- குழந்தைத் திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்ற 18 வயதுக்கு மேற்பட்ட ஆணாக உள்ள ஒருவருக்கு இரண்டு வருடங்கள் வரை நீட்டிக்கக் கூடிய கடுங்காவல் சிறைத் தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.
- எந்த ஒரு குழந்தைத் திருமணத்தை செய்து கொள்கின்ற, நடத்துகின்ற, வழிநடத்துகின்ற அல்லது உடந்தையாக இருக்கும் நபருக்கு, அந்தத் திருமணம் ஒரு குழந்தைத் திருமணம் அல்ல என அவர் நம்பினார் என்பதற்கான காரணங்களை அவர் நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் இரண்டு வருடங்கள் வரை நீட்டிக்கக் கூடிய கடுங்காவல் தண்டனை மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

- ஒரு குழந்தையை சட்டப்படியோ, சட்ட விரோதமாகவோ தன் பொறுப்பில் வைத்திருக்கும பெற்றோர் பாதுகாவலர் வேறு எவரேனும், எந்த நிலையிலும் அல்லது அமைப்போ, அவற்றின் உறுப்பினர்களோ அல்லது நபர்களின் சங்கமோ குழந்தை திருமணத்தை ஊக்குவிக்கின்ற அல்லது அந்தச் சடங்கு நடைபெற அனுமதிக்கின்ற, அல்லது குழந்தைத் திருமணத்தில் கலந்து கொள்ளுதல் அல்லது பங்கெடுத்தல் உள்ளிட்ட, வேண்டுமென்றே அதைத் தடுக்கத் தவறுகின்ற செயல்களுக்கு இரண்டு வருடங்கள் வரை நீட்டிக்கக் கூடிய கடுங்காவல் தண்டனையும், ஒரு இலட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும்.
- குழந்தை திருமணம் குறித்து புகார் வரும் பட்சத்தில் அப்படிப்பட்ட குழந்தை திருமத்திற்கு உடனடியாக தடை விதித்து உத்தரவு வழங்கிட மாவட்ட நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

**சட்டத்தைச் செயல்படுத்துதல்**

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழக அரசு 30.12.2009 அன்று மாநில விதிகளை வகுத்து அறிவித்தது. இச்சட்டத்தை திறம்பட செயல்படுத்த, ஒவ்வொரு மாவட்டத்தின் மாவட்ட சமூக நல அலுவலர் குழந்தை திருமண தடுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். குழந்தை திருமனத் தடுப்பு அலுவலர்கள், தகவல் தொடர்பு முறைகள் மூலம் பெறப்படும் தகவல்களின் மீது நடவடிக்கை எடுக்கவும், குழந்தை திருமணத்தை ரத்து செய்யக் கோரி மாவட்ட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவும், குழந்தை திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை பாதுகாக்கவும், பராமரிக்கவும் அதிகாரம் உள்ளது. கிராமப்புறங்களில் நடக்கும் குழந்தைத் திருமணங்களை தடுக்க, பஞ்சாயத்து தலைவர்கள் தலைமையில் பஞ்சாயத்து அளவிலான மத்திய குழு அமைக்கப்பட்டுள்ளது.

# 8
# பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் – 2012



*பாலியல் துன்புறுத்தலில் இருந்து 18 வயதுக்குக் குறைவான அனைத்துக் குழந்தைகளையும் பாலின வித்தியாசமின்றி பாதுகாக்க கொண்டு வரப்பட்ட சட்டம் இது. தொழில்நுட்பம் ஆதிக்கம் செய்யும் தற்காலத்தில் உருவாகும் நவீனக் குற்றங்களையும் எதிர்கொள்ளும் வகையில் உள்ளது.*

*பாலியல் தொந்தரவு, பாலியல் வல்லுறவுக்கு ஆளாகும் சிறார் தொடர்பான புகாரை பாதிக்கப்பட்ட அந்த நபரோ அவரது பெற்றோரோ, மருத்துவரோ, உறவினரோ, நண்பரோ, அவர் படிக்கும் பள்ளியோ, அதன் ஊழியர்களோ தெரிவிக்கலாம்.*

***சிறார் மீதான பாலியல் வன்முறை குறித்த புகாரை நேரடியாக காவல் நிலையத்திலோ அல்லது https://www.ncpcr.gov.in/user_complaints.php என்ற இணையப் பக்கம் மூலமாகவோ தெரிவிக்கலாம். சிறார் இலவச தொலைபேசி உதவி எண். 1098 மூலமாகவும் பாதிக்கப்பட்டவர் புகார் தெரிவிக்கலாம்.***

*சட்டப்பிரிவு 3 மற்றும் 4 - குழந்தைகளை பாலியல் தொந்தரவு அல்லது வல்லுறவுக்கு உட்படுத்துவது குற்றம்.*

*சட்டப்பிரிவு 5 மற்றும் 6 -குழந்தைகளை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குகிற, குழந்தைகளின் பெற்றோர், பாதுகாவலர் (கார்டியன்), காப்பக அலுவலர், ஆசிரியர் அல்லது காவல் துறை அதிகாரி, சிறை ஊழியர், வார்டன் ஆகியோரும் குற்றவாளிகளே.*

*சட்டப்பிரிவு 7 மற்றும் 8 - குழந்தைகளின் அந்தரங்க உறுப்புகளைத் தொடுவது அல்லது மற்றவரின் அந்தரங்க உறுப்புகளை கட்டாயப்படுத்தி தொட வைப்பது, அவர்களிடம் பாலியல் சீண்டல்கள் செய்வது குற்றம்.*

*சட்டப்பிரிவு 9 மற்றும் 10 - குழந்தைகளை பாலியல் சீண்டல் செய்கிற, குழந்தைகளின் பெற்றோர், பாதுகாவலர் (கார்டியன்), காப்பக அலுவலர், ஆசிரியர் அல்லது காவல் துறை அதிகாரி, சிறை ஊழியர், வார்டன் ஆகியோருக்கு தண்டனை.*

*சட்டப்பிரிவு 11 மற்றும் 12 - குழந்தைகளிடம் பாலியல் ரீதியான செய்கைகளை காட்டுவது, தொலைபேசி, அலைபேசியில் ஆபாசமாக பேசுவது, மின்னஞ்சல் அனுப்புவது, திட்டுவது, பாலியல் இச்சைக்கு அழைப்பது குற்றம்.*

*சட்டப்பிரிவு 13 மற்றும் 14 - குழந்தைகள் தொடர்பான ஆபாச படங்களை எடுப்பது, விற்பது, தயாரிப்பது, மற்றவருக்கு கொடுப்பது குற்றம். இது இணைய தளம், கணிணி என எந்த தொழில்நுட்ப வடிவில் இருந்தாலும் குற்றமாகக் கருதப்படும்.*

*சட்டப்பிரிவு 21 - குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றத்தை மறைத்தலும் குற்றம்.*

# 9
# மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் சட்டம் – 2016



*சட்டப்பிரிவு 4 - அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் மற்றும் பெண்கள் பிறருடன் சமமாக உரிமைகளை அனுபவிப்பதற்கான நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டும்.*

*சட்டப்பிரிவு 24(d) - மாற்றுத் திறனாளிப் பெண்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கும், குழந்தைகளை வளர்ப்பதற்கும் சம்பந்தப்பட்ட அரசுகள் உரிய சமூக பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்திட வேண்டும்.*

*சட்டப்பிரிவு 25 (1)(k) - மாற்றுத் திறனாளிப் பெண்கள் இயல்பாய் கருத்தரிக்கும் வகையில் ஆரோக்கிய நடைமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.*

*சட்டப்பிரிவு 37 - அரசின் வேளாண்மை மற்றும் வீட்டு வசதி போன்ற நலத் திட்டங்களில் 5% மாற்றுத் திறனாளிப் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாற்றுத் திறனாளிப் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.*

*சட்டப்பிரிவு 60(r)(ii) - மாற்றுத் திறன் குறித்த ஒன்றிய அறிவுறுத்தல் குழு உறுப்பினர்களில் 5 பேர் பெண்கள் இடம்பெற வேண்டும்.*

*சட்டப்பிரிவு 66 (e) (iii) - மாற்றுத் திறன் குறித்த மாநில அறிவுறுத்தல் குழு உறுப்பினர்களில் 5 பேர் பெண்கள் இடம்பெற வேண்டும்.*

# 10
# உணவு பாதுகாப்புச் சட்டம்



*சட்டப்பிரிவு 4:* பெண்களுக்கு மகப்பேறு காலம் முழுவதும் மற்றும் மகப்பேறு முடிந்த ஆறு மாதத்திற்கும் மற்றும் தாய்ப்பால் புகட்டும் பெண்களுக்கும் இலவச ஊட்டச் சத்தான உணவை அருகாமை அங்கன்வாடி மையத்தின் மூலம் வழங்கிட வேண்டும்.

*சட்டப்பிரிவு 12 (e):* பொது விநியோக மையங்கள் நடத்த அனுமதியளிக்கும் போது பெண்கள் அல்லது பெண்களால் நிர்வகிக்கப்படும் குழுக்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

*சட்டப்பிரிவு 13:* குடும்ப அட்டை பெற வேண்டுமெனில் குடும்பத்திலுள்ள 18 வயது பூர்த்தியான பெண்களுள் ஒருவரை குடும்பத் தலைவியாக அறிவிக்க வேண்டும்.

*சட்டப்பிரிவு 16:* மாநில உணவு ஆணையத்தில், தலைவராகவோ, உறுப்பினராகவோ அல்லது உறுப்பினர் செயலாளராகவோ இரண்டு பெண்கள் நியமிக்கப்பட வேண்டும்.

*சட்டப்பிரிவு 29:* கண்காணிப்பு குழுக்களை நியமிக்கும் போது பெண்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் வழங்கும் விதத்தில் மாநில அரசுகள் விதிகளை உருவாக்கிட வேண்டும்.

# 11
# பெண்களும் தொழிலாளர் சட்டங்களும்



**அ.பெண்களும் தொழிற்சாலை சட்டமும்:**

*சட்டப்பிரிவு 19 (1) (b): பெண்களுக்கு தனியாக கழிப்பறைகள் அமைக்கப்பட வேண்டும்.*

*சட்டப்பிரிவு 27: பருத்தி தொழிற்சாலைகளில் அபயாகரமான பகுதிகளில் பெண்களையோ, சிறார்களையோ பணியில் ஈடுபடுத்தக் கூடாது.*

*சட்டப்பிரிவு 34: பெண்கள் சுமக்க வேண்டிய பாரங்கள் குறித்த கராரான வரையறைகளை மாநில அரசுகள் உருவாக்கிட வேண்டும்.*

*சட்டப்பிரிவு 42: பெண்களுக்கு தனியான ஓய்வறைகள் அமைக்கப்பட வேண்டும்.*

*சட்டப்பிரிவு 48: 30 பெண்கள் பணிபு¡¢யும் தொழிற்சாலையில் குழந்தைகள் பராமா¢ப்புக்கான அறைகளை கட்டாயம் அந்த தொழில் நிறுவனம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.*

*சட்டப்பிரிவு 66 (1) (b): பெண்களை காலை 06.00 மணி முதல் மாலை 07.00 மணிக்கு மேல் பணி செய்ய பணிக்கக் கூடாது. பெண் ஊழியரிடம் உரிய இசைவு பெற்றுக் கொண்டும், அரசிடம் உரிய அனுமதி பெற்றபின்பும் தான் பெண்களை இரவு நேரப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.*

*சட்டப்பிரிவு 87: அபாயகரமான பணிகளில் பெண்களை ஈடுபடுத்தப்படுவதை தடுக்க மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.*

**ஆ.பேறுகால சலுகைச் சட்டம் : ( 2017 திருத்தச் சட்டம் )**

*இந்த சட்டத்தின்படி, ஒரு பெண் தொழிலாளிக்கு மொத்தம் 26 மாதங்கள் சம்பளத்துடன் கூடிய பேறு கால விடுப்பாக பெற உரிமையுள்ளது. இந்த உரிமையானது இரண்டு குழந்தை பேறு காலங்களுக்கும் தனித் தனியே வழங்கப்பட வேண்டும். 8 வாரங்கள் வரை பேறு காலத்திற்கு முன்பும், மீதமுள்ள வாரங்களை பேறு காலத்திற்கு பின்பும் சம்பந்தப்பட்ட பெண் தொழிலாளி பெற்றுக் கொள்ளலாம்.*

**இ.தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951.**

*இந்த சட்டத்தின் பிரிவுகள் 12, 15 மற்றும் 32 ஆகியவை குழந்தை பராமரிப்பு அறைகள், தொழிலாளிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உரிய உரைவிடம் வழங்குதல் மற்றும் பேறுகால சம்பளம் உள்ளிட்ட உரிமைகளை அளித்துள்ளது.*

**ஈ. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டம், 2005.**

*இந்த சட்டத்தின் பிரிவு 10(1)(3)(d) (a) மற்றும் 12(1)-ன் படி திட்டம்/பணிகளை மேற்பார்வையிடும் குழுவில் குறைந்தது மூன்றில் ஒரு பகுதியினர் பெண்கள் இருத்தல் வேண்டும்.*

*அட்டவணை - II- சட்டப்பிரிவு 6-ன் படி மேற்கொள்ளப்படும் பணியில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்களை ஈடுபடுத்திட வேண்டும்.*

*அட்டவணை - II- சட்டப்பிரிவு 24-ன் படி 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுடன் 5க்கும் மேற்பட்ட பெண்கள் பணிக்கு வரும் பட்சத்தில் அவர்களில் ஒருவரை குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக சம்பளத்துடன் நியமிக்க வேண்டும்.*

**உ.முறைசாரா தொழிலாளர் சமூக பாதுகாப்புச் சட்டம், 2008.**

*சட்டப்பிரிவு 3: இந்த தொழிலாலர்களுக்கு தேவையான மருத்துவம் மற்றும் மகப்பேறு பலன்களுக்கான சமூக நல திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.*

**ஊ.கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர் (பணி மற்றும் பணி நிலைகள் முறைப்படுத்தல்) சட்டம் 1996**

*சட்டப்பிரிவு 22: மாநில நல வாரியங்கள் மகளிர் பயனாளிகளுக்கு பேறுகால பணப் பலன்களை வழங்கிட வேண்டும்.*

*சட்டப்பிரிவு 35 : 45க்கு மேற்பட்ட பெண்கள் பணியாற்றும் இடங்களில் குழந்தைகள் பராமறிப்பு மையம் அமைத்திட வேண்டும்.*

## 12

## நிறுவனச் சட்டம் (Companies Act 2013)

*சட்டப்பிரிவு 149(1) நிறுவன சட்டம் 2013, விதி, 2014 விதி 3-ன் படி ரூ.100 கோடி அதற்கு மேல் முதலீடுகள் இருக்கும் பட்டியலிடப்பட்ட பொது நிறுவனத்தில் அல்லது ரூ. 300 கோடிக்கு மேல் ஆண்டு பரிவர்த்தனை உள்ள பொது நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஒரு பெண் இயக்குனராவது நியமிக்கப்பட வேண்டும்.*

●●●●●●

## 13

## தமிழ்நாடு விடுதிகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டம் 2014

*பெண்கள் மற்றும் குழந்தைகள் சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களை அனைத்து விதமான அச்சுறுத்தல்களிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தங்கும் விடுதிகள் மற்றும் இல்லங்களில் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படுவது மிகவும் இன்றியமையாதது. மேலும் அவர்களது சொந்த வீட்டிற்கு சமமான சாதகமான சூழலை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தங்கும் விடுதிகளை ஒழுங்குபடுத்துவதற்கான பிரத்யேகச் சட்டத்தை தமிழ்நாடு அரசு வகுத்துள்ளது.*

*தமிழ்நாடு விடுதிகள் மற்றும் இல்லங்கள் சட்டம் 2014 மற்றும் தமிழ்நாடு விடுதிகள் மற்றும் இல்லங்கள் விதிகள், 2015 ஆகியவை பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதிகளை பதிவு செய்வதற்கான வழிகாட்டுதல்களை அரசால் வகுக்கப்பட்டுள்ளன.*

*மேற்கூறிய சட்டத்தின் 4வது பிரிவின்படி, உரிமம் இல்லாமல் பெண்கள் விடுதிகள் மற்றும் இல்லங்கள் இயங்கக்கூடாது.*

*பிரிவு 5ன் படி, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி அல்லது இல்லம் அமைக்க, பராமரிக்க அல்லது நடத்த விரும்பும் எவரொருவரும் உரிமம் கோரி மாவட்ட ஆட்சி தலைவரிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும்.*

விதிகளைப் பின்பற்றாமல், பதிவு செய்யாமல் தங்கும் விடுதிகளையும், இல்லங்களையும் நடத்திவரும் எந்தவொரு தனி நபருக்கும், நிறுவனத்திற்கும் தண்டனைகளை இந்த சட்டம் பரிந்துரைத்துள்ளது.

●●●●●●

# 14

# பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை (தவிர்த்தல், தடைசெய்தல் மற்றும் நிவாரணமளித்தல்) சட்டம் – 2013

பணியிடங்களில் நடைபெறும் பாலியல் வன்முறையிலிருந்து பெண்களை பாதுக்கக்கவும் பாலியல் வன்முறையைத் தடுத்து அத்தகைய புகார்களை விசாரித்து நிவாரணம் வழங்கவும் இச்சட்டம் வழி வகுக்கிறது.

***பணியிடங்களில் பாலியல் வன்முறை என்பது மனித உரிமை மீறலாகும்.***

**பாலியல் வன்முறை என்றால் என்ன?**

- உடல் ரீதியான தொடுதல்.
- உடலுறவுக்காக தொடுதல்.
- பாலுணர்வு தொடர்பாக பேசுதல்.
- நிர்வாண மற்றும் உடலுறவுக் காட்சிகளைக் காட்டுதல்.
- விரும்பத்தகாத, உடல் ரீதியான, வார்த்தைகளாலான மற்றும் வார்த்தைகளற்ற பாலுணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

**பணியிடங்களில் பாலியல் வன்முறை தடுத்தல்**

- பணியிடங்களில் எந்த ஒரு பெண்ணையும் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கக் கூடாது.
- பணியில் சிறப்பிடம் தருவதற்கான உத்திரவாதம், தீங்கு விளைவிப்பேன் என மிரட்டுதல், பணி செய்ய முடியாத அளவிற்கான பகைமை பணிச் சூழலை உருவாக்குதல், உடல்நிலை மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துதல் ஆகியவை பாலியல் வன்முறையாகும்.

**புகார் கமிட்டி**

- *வேலை அளிக்கும் முதலாளி புகார் கமிட்டி ஒன்றை அமைக்க வேண்டும்.*
- *புகார் கமிட்டித் தலைவராக மூத்த பெண் பணியாளரையும், உறுப்பினர்களாக தொழிலாளர்கள் இரண்டு பேரையும், அரசு சாரா நிறுவனத்திலிருந்து ஒருவரைய்ம் உள்ளடக்கியதாக அந்த கமிட்டி இருக்க வேண்டும். நியமிக்கப்பட்ட நால்வரில் சரிபாதி பெண்களாக இருக்க வேண்டும்.*

**உள்ளூர் புகார் கமிட்டி**

- *பத்துக்கும் குறைவான பணியாளர்கள் உடைய நிறுவனங்களில் நடைபெறும் பாலியல் வன்முறையைத் தடுக்க உள்ளூர் புகார் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.*

**பாலியல் வன்முறை குறித்த புகார்**

- *எழுத்து மூலமானதாக இருக்க வேண்டும்.*
- *மூன்று மாதங்களுக்குள் புகார் கொடுக்க வேண்டும்*
- *புகார் கொடுக்க வரமுடியாத நிலையில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பதிலாக அவரது சட்டப்பூர்வ வாரிசு அல்லது வேறு எவரேனும் புகார் கொடுக்கலாம்.*

**சமரசம்**

- *விசாரனை நடத்துவதற்கு முன்னதாக சமரசத்திற்கு முயற்சி செய்ய வேண்டும்.*
- *பணம் கொடுப்பதை அடிப்படையாக வைத்து சமரசம் செய்யக் கூடாது.*

**விசாரனை**

- *பணி விதிகள் அடிப்படையில் விசாரணை நடத்த வேண்டும்.*
- *குற்றம் நிகழ்ந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பது தெரிந்தால் ஏழு நாட்களுக்குள் போலிசில் புகார் பதிவு செய்ய வேண்டும்.*
- *விசாரனை நிலுவையில் இருக்கும் பொழுது பாதிக்கப்ப்ட்ட பெண் விரும்பினால் 3 மாதங்கள் வரையிலான விடுமுறையோ அல்லத பணியிட மாறுதலோ கொடுக்க வேண்டும்.*
- *குற்றம் நிரூபிக்கப்பட்டால் அது ஒழுங்கீனம் எனக் கருதப்பட்டு குற்றம் இழைத்தவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

- *பாதிக்கப்பட்ட பெண் நிதி நிவாரணம் பெற தகுதி உள்ளவர் என புகார் கமிட்டி கருதினால் குற்றம் இழைத்த நபரின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து தரப்படவேண்டும்.*

***பொய்யான அல்லது கெட்ட நோக்கத்தோடு கொடுக்கப்படும் புகார் அல்லது சாட்சியம்***

*பாதிக்கப்பட்டதாக பொய்யாக புகார் கொடுத்து, திசை திருப்பும் ஆவணங்களைக் கொடுத்ததற்காக அந்த பெண் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி நிர்வாகத்திடம் புகார் கமிட்டி பரிந்துரைக்கலாம்.* ***ஆனால், புகாரை நிரூபிக்க முடியவில்லை என்ற காரணத்திற்காக அந்த பெண் மீது நடவடிக்கை எடுக்க முடியாது.***

**இழப்பீடு நிர்ணயித்தல்**

- *மன உளைச்சல், வலி*
- *உணர்வு ரீதியான பாதிப்பு, பாலியல் வன்முறையால் நிகழ்ந்த பணி இழப்பு.*
- *மருத்து செலவீனம்.*
- *எதிர்மனுதாரரர் பொருளாதார நிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இழப்பீடு நிர்ணயிக்கப்படும்.*

**நிர்வாகத்தின் கடமைகள்**

- *பதுகாப்பான பணிச்சூழலை ஏற்படுத்துதல்.*
- *புகார் கமிட்டி அமைப்பு குறித்தும், பாலியல் வன்முறையின் பின் விளைவுகள் குறித்தும் எல்லோரும் பார்க்கக் கூடிய இடத்தில் அறிவிப்பு வைத்தல்.*
- *பணியாளர்களுக்கு பயிற்சிப் பட்டறைகள், விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்.*
- *புகார் கமிட்டிக்குத் தேவையான வசதிகளை செய்து தருதல்.*
- *எதிர்மனுதாரர் மற்றும் சாட்சிகளின் வருகையை உத்திரவாதப்படுத்தல்.*
- *பாலியல் வன்முறை குறித்து புகார் கமிட்டிக்குத் தெரிவித்தல்.*
- *ஒருவேளை காவல்துறைக்கு புகார் கொடுக்க பாதிக்கப்பட்ட பெண் விரும்பினால் அவருக்கு உதவுதல்.*
- *குற்றமிழைத்தவர் தனது நிறுவனத்தின் தொழிலாளி அல்ல எனில் இந்திய தண்டனைச் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.*

- *பாலியல் வன்முறையை ஒழுங்கீனம் என பணி விதிகளில் குறிப்பிட்டு அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல்.*
- *புகார் கமிட்டி உரிய காலத்தில் அறிக்கையைத் தாக்கல் செய்வதை உறுதிப்படுத்துதல்.*

**தண்டனை**

- *நிர்வாகி புகார் கமிட்டியை அமைக்கத் தவறினாலோ அல்லது புகார் கமிட்டி அளிக்கின்ற அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கத் தவறினாலோ இச்சட்டப் பிரிவுகளுக்கு முரணாக நடந்தாலோ தண்டனைக்குறியக் குற்றம் இழைத்தவராக கருதப்பட்டு ரூ.50,000/- வரையிலான அபராதமும் விதிக்கப்படும்.*

●●●●●●

## 15
## தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000



*சட்டப்பிரிவு 65 : ஒரு நபா¢ன் தனிப்பட்ட கணினியில் இருக்கும் தகவல்களை மோசடியான திருத்தம் செய்தல் தண்டனைக்குறிய குற்றமாகும்.*

*சட்டப்பிரிவு 66 D: கணினி மூலங்களைக் கொண்டு ஆள்மாறாட்டம் செய்து மோசடி செய்வது தண்டனைக்குறிய குற்றமாகும்.*

*சட்டப்பிரிவு 66 E : கணினி வாயிலாக ஒருவரின் அந்தரங்கங்களில் அத்துமீறுதல் தண்டனைக்குறிய குற்றமாகும்.*

*சட்டப் பிரிவு 67 :ஆபாச தரவுகளை இணையத்தில் பகிர்வது தண்டனைக்குறிய குற்றமாகும்.*

*சட்டப்பிரிவு 67 A : பாலியல் செயல்கள் போன்றவற்றை இணையத்தில் பகிர்தல் குற்றமாகும்.*

*சட்டப்பிரிவு 67 B : குழந்தைகளை பாலியல் ரீதியாக சித்தரிக்கும் விஷயங்களை இணையத்தில் பகிர்தல் தண்டனைக்குறிய குற்றமாகும்.*

*மின்னஞ்சல் மூலம் தொல்லை தருதல், இணையவழி பின்தொடர்தல், இணையவழி அவதூறு செய்தல், குழந்தைகள் ஆபாசப்படம் பகிர்தல், பாலியல் துன்புறுத்தல் அல்லது சுரண்டலை இலக்காகக் கொண்டு நடைபெறும் இணையவழி மிரட்டல்கள் அனைத்தும் குற்றாங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.*

# 16
# இந்திய தண்டனைச் சட்ட பாதுகாப்புகள்

*முதன்முறையாக இந்தியா முழுமைக்கும் பொதுவான குற்றச் செயல்களை வரையறை செய்தும், அவ்வாறான குற்றச் செயல்களுக்கான தண்டனைகளை வரையறை செய்தும் இயற்றப்பட்ட முதல் சட்டம் "இந்திய தண்டனைச் சட்டம்" இந்த சட்டமானது பெண்களுக்கெதிரான குற்றங்களையும், அவற்றுக்கான தண்டனைகளையும் உள்ளடக்கியே இயற்றப்பட்டுள்ளது. அவ்வாறு இயற்றப்பட்டுள்ள பெண்களுக்கெதிரான குற்றங்கள் மற்றும் அவற்றுக்கான தண்டனைகள் விபரத்தை சுருக்கமாக பார்ப்போம்.*

**சட்டப்பிரிவு 294:** *பிறருக்கு தொல்லை விளைவிக்கும் வகையில் பொது இடத்தில் ஆபாசமான செயலை செய்தல், ஆபாசமான பாடல்களைப் பாடுதல், வார்த்தைகளைப் பேசுதல்.*

**சட்டப்பிரிவு 304 B:** *திருமணமாகி ஏழு வருடங்களுக்குள் இயற்கைக்கு மாறான முறையில் ஒரு பெண் தீக்காயங்களாலோ, உடற்காயங்களாளோ இறந்திருந்தால், அதுவும் இறப்புக்கு முன் வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகியிருந்தால் அந்த மரணம் வரதட்சணை மரணமாகக் கருதப்பட்டு மரண தண்டனை வரை விதிக்கப்படும்.*

**சட்டப்பிரிவு 326 A:** அமில வீச்சின் மூலம் பெண்ணுக்கு கொடுங்காயம் விளைவித்தல்.

**சட்டப்பிரிவு 326 B :** பெண்ணின் மீது அமில வீசுதல் அல்லது வீசுவதற்கு முயற்சித்தல்.

**சட்டப்பிரிவு 354 :** ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தும் நோக்கத்தோடு அடிப்பதும் அவர் மீது வன்முறையை ஏவுவதும் குற்றம்.

**சட்டப்பிரிவு 354A :** பாலியல் துன்புறுத்தல் செய்தல்.

**சட்டப்பிரிவு 354B :** ஒரு பெண்ணின் ஆடையைக் களைதல் மற்றும் அடித்தல்

**சட்டப்பிரிவு 354C :** ஒரு பெண்ணின் அந்தரங்கத்தை மறைந்திருந்து பார்த்தல் மற்றும் புகைப்பட எடுத்தல்.

சட்டப்பிரிவு 366 - ஒரு பெண்ணை கட்டாயத் திருமணத்திற்கு கடத்தி செலுத்தல்.

சட்டப்பிரிவு 366A -18 வயதுக்குக் குறைவான இளவல் (மைனர்) பெண்ணை வேறொரு ஆணோடு முறையற்ற உறவு கொள்ள கூட்டிச் செல்லுதல்.

சட்டப்பிரிவு 366 B - கட்டாயப்படுத்தி வேறொருவருடன் முறையற்ற உறவு கொள்ள வெளிநாட்டிலிருந்து பெண்களை இறக்குமதி செய்தல்.

சட்டப்பிரிவு 370 - பாலியல் தொழிலுக்காக ஒரு பெண்ணைக் கடத்துதல்.

சட்டப்பிரிவு 375 - ஒரு பெண்ணை அவளது விருப்பம் இல்லாமலோ, வேறு வகையிலோ பாலியல் வன்புணர்வு செய்தல்.

சட்டப்பிரிவு 493 - சட்டப்படி திருமணம் செய்து கொண்டதாக ஏமாற்றி பெண்ணுடன் குடும்பம் நடத்துவது குற்றம்.

சட்டப்பிரிவு 495 - முதல் திருமணத்தை மறைத்து இரண்டாவது திருமணம் செய்தல்.

சட்டப்பிரிவு 496 - ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு மோசடியான சடங்குகளை செய்து திருமணம் செய்ததாக ஏமாற்றுதல்

சட்டப்பிரிவு 498 - திருமணமான ஒரு பெண்ணை குற்றமுறு எண்ணத்துடன் ஆசை வார்த்தை கூறி அழைத்துச் செலுதல் அல்லது கடத்திச் செல்லுதல்.

சட்டப்பிரிவு 498A - சட்டத்திற்கு புறம்பாக சொத்து மற்றும் பணப்பயன் பெற ஒரு பெண்ணின் கணவன் அல்லது கணவா¢ன் உறவினர்கள் அவளைக் கொடுமைக்கு உள்ளாக்குதல்.

மேற்படியான அனைத்து சட்டப்பிரிவுகளில் உள்ள குற்றச் செயல்களுக்கான தண்டனைகளும் இந்த சட்டத்திலேயே பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அதே சமயம் இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-ன் முதல் அட்டவணையில் மேலே விவரிக்கப்பட்டுள்ள அனைத்து குற்றச் செயல்களையும் வகைப்படுத்தி அவற்றுக்குண்டான தண்டனைகள் மற்றும் விசாரணை நீதிமன்றங்கள் குறித்த விபரங்களை தெளிவாக பட்டியலிடப்பட்டுள்ளது.

●●●●●●

# 17
# தனது உடலின் மீதான் பெண்ணின் உரிமை

**(அ) கருவுற்றிருத்தலை மருத்துவ ரீதியில் கலைப்பதற்கான சட்டம் 1971. திருத்தச்சட்ட – 2002 மற்றும் திருத்தச் சட்டம் 2023:**

இந்த சட்டமானது கருக்கலைப்பை பெண்ணிடமிருந்து பிரிக்க முடியாத அடிப்படை உரிமை என்று அங்கிகரித்து, சட்டப்படி கருக்கலைப்பு செய்து கொள்ளும் உரிமையையும் உறுதிப்படுத்துகிறது.

சட்டப்பிரிவு 2(d): பதிவு செய்யப்பட்ட மருத்துவர் என்றால் யார் என்பதை இந்த பிரிவு விவரிக்கிறது.

சட்டப்பிரிவு 3 (2)(b): 20 வாரம் வரை கருக்கலைப்பை இந்த பிரிவு அனுமதிக்கிறது.

சட்டப்பிரிவு 3 (2)(b)(ii): கருக்கலைப்பிற்கான அடிப்படைகளை இந்த பிரிவு விவரிக்கிறது.

சட்டப்பிரிவு 4: போதிய கட்டமைப்புகள் கொண்ட அனைத்து பொது மருத்துவமனைகளிலும் சட்டப்படி கருக்கலைப்பு செய்ய இந்த பிரிவு அதிகாரம் அளிக்கிறது.

மேலும் இந்தச் சட்டம் கருவின் பாலினம் அறிந்து கொள்வதை சட்டவிரோதமென பிரகடனப்படுத்துகிறது.

**(ஆ) உடன் கட்டை ஏறுதல் (தடுப்பு) சட்டம், 1987:**

இந்த சட்டத்தின் மூலம் இறந்த கணவா¢ன் சி¨தையுடன் மனைவியை உயிருடன் எரிப்பதையும், இந்த நடைமுறையை புனிதமாக்கப் படுவதையும் தண்டனைக்குறிய கிரிமினல் குற்றமாக பிரகடனப்படுத்துகிறது.

**(இ) தமிழ்நாடு தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் 1947.**

தமிழ்நாட்டில் பெண்களை கோவில்களுக்கு பொட்டுக்கட்டி விடும் வழக்கத்தை குற்றச் செய¦லென பிரகடனப்படுத்தி ஒழித்துக்கட்டியது.

● ● ● ● ● ●

## 18

## பெண்களை அநாகரீகமாக பிரதிநிதிப்படுத்தல் (தடுப்பு) சட்டம், 1986

விளம்பரம், வெளியீடு, ஓவியம், எழுத்து, உருவம் எந்த வகையில் பெண்களை அநாகரீகமாக பிரதிநிதிப்படுத்துவதை இந்த சட்டம் தண்டனைக்குறிய குற்றமென அறிவிக்கிறது.

பெண்களை அநாகரீகமாக சித்தரிக்கும் பொருட்கள் இருக்கும் இடங்களை சோதனையிடவும், பொருட்களை பரிமுதல் செய்யும் வழிமுறைகளை இந்த சட்டம் வரையறுத்துள்ளது.

சட்டப்பிரிவு 6 மற்றும் 7 ஆகியவை குற்றச்செயல்களுக்கான அபராதம் மற்றும் தண்டனைகளை வரையறுத்துள்ளது.

● ● ● ● ● ●

# 19
# குற்றவியல் (திருத்த) சட்டம் –2013

*டெல்லியில் நிர்பயா எனும் மருத்துவ மாணவி 2012இல் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி இறந்தார். மக்கள் போராட்டங்கள் பல வெடித்ததால், பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்காக, 'நீதிபதி வர்மா கமிட்டி' அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளுக்கேற்ப, குற்றவியல் (திருத்த) சட்டம் 2013 வாயிலாக, இந்திய தண்டனைச் சட்டம் 1860, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 1872 ஆகியவற்றில் திருத்தங்கள் செய்யப்பட்டன.*

★ *ஆசிட் தாக்குதல், பாலியல் துன்புறுத்தல், பார்வை பாலியல் துன்புறுத்தல், ஒரு பெண்ணின் ஆடைகளைக் களைத்தல் மற்றும் பின் தொடர்தல் உள்ளிட்ட புதிய குற்றங்கள் இந்திய தண்டனை சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.*

★ *பாலியல் வன்புணர்ச்சி, பாலியல் துன்புறுத்தல், பின் தொடர்தல், ஆசிட் தாக்குதல்கள், வார்த்தைகள் மற்றும் முறையற்ற வகையில் தொடுதல், அநாகரீகமான சைகை செய்தல்கள் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.*

★ *பாலியல் வன்புணர்வு என்பதற்கான வரையறையில் வாய்வழி பாலுறவு, புணர்ச்சியற்ற பாலுறவு சேர்க்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.*

★ *ஒரு பகுதியில் நிறுத்தப்பட்டிருக்கும் ஆயுதப்படையைச் சேர்ந்த உறுப்பினரால் செய்யப்படும் பாலியல் வன்புணர்வும், வகுப்புவாத அல்லது இனவாத வன்முறையின் போது அல்லது சம்மதம் தெரிவிக்க இயலாத நிலையில் உள்ள ஒரு பெண்ணின் மீது செய்யப்படும் பாலியல் வன்புணர்வும், 'கூட்டு பாலியல் வன்புணர்வு" எனும் குற்றத்தோடு, சேர்க்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.*

★ *கூட்டு பாலியல் வன்புணர்வால் மரணம் மற்றும் கூட்டுப் பாலியல் வன்புணர்வால் பாதிக்கப்பட்டவர் உணர்வற்ற நிலைக்கு செல்லுதல் ஆகியவற்றுக்கான தண்டனைகள், ஆயுள் தண்டனை மற்றும் மரண தண்டனையாக அதிகரிக்கப்பட்டுள்ளன.*

★ அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், ஆசிட் தாக்குதல் மற்றும் பாலியல் வன்புணர்வால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக இலவச முதலுதவி அல்லது மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டியதும், உடனடியாக அந்த நிகழ்வைப் பற்றி காவல் துறைக்குத் தகவல் அளிக்க வேண்டியதும் கட்டாயமாக்கப்பட்டது.

★ சுரண்டல் என்பதன் பொருள் வரம்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உடல்ரீதியான சுரண்டல் அல்லது எந்தவொரு வடிவிலான பாலியல் ரீதியான சுரண்டல், அடிமைத்தனம், கொத்தடிமை அல்லது கட்டாயப்படுத்தி உடலுறுப்புகளை எடுத்தல் ஆகியவற்றுக்காக, குழந்தைகள் கடத்தப்படுதல் உள்ளிட்ட ஆள் கடத்த ஆகியவை எல்லாம் சுரண்டலில் சேர்க்கப்பட்டுள்ளன.

●●●●●●

# 20
# காவல்துறையின் கடமைகள்

1. காவல்நிலையத்தில் புகார் கொடுத்தால், புகார் கொடுத்ததற்கான ரசீது அளிக்க வேண்டும்.
2. நீதிமன்ற பிடியாணையுடன் தான் காவல்துறையினர் கைது செய்ய முடியும். ஆனால், சில சந்தர்ப்பங்களில் கடுமையான குற்றாங்களின் போது பிடியாணை இல்லாமலே காவல்துறையினர் கைது செய்யலாம். சில வேலைகளில் குற்றம் நடக்காமல் இருப்பதற்காகவும் கைது செய்யலாம். மேலும் காவல்துறை அதிகாரிகள் கேட்கும்பொழுது பெயரையும், முகவரியையும் கொடுக்க மறுத்தாலும் கைது செய்யலாம்.
3. சூரிய உதயத்திற்கு முன்பும், சூரிய மறைவுக்கு பின்பும் பெண்களை கைது செய்யவோ, காவல் நிலையம் அழைத்து செல்லவோ கூடாது. ஒரு பெண்ணை பெண் காவல் அதிகாரி மட்டுமே பரிசோதனை செய்யலாம். ஒரு பெண்ணை பெண் மருத்துவர் மட்டுமே மருத்துவ பரிசோதனை செய்யலாம். காவல்துறை அதிகரிகள் கைது செய்யப்பட்ட நபரை கண்ணியமாக நடத்த வேண்டும்.

4. விசாரணைக்கு பிறகு குற்றம் நடந்ததற்கான முகாந்திரம் இருப்பதாக அறிந்தால் காவல்துறையினர் முதல் தகவல் அறிக்க்கையினை பதிவு செய்ய வேண்டும்.

5. முதல் தகவல் அறிக்கை நகலை இலவசமாக பெற்றுக் கொள்ள புகார்தாரருக்கு உரிமை உண்டு.

6. விசாரணையின் போது காவல் நிலையத்தில் வழக்கறிஞருடன் செல்வதற்கு உரிமை உண்டு.

7. பொருளாதார வசதியில்லை என்றால் இலவச சட்ட உதவி மையத்தை அணுகலாம்.

8. கைது செய்த 24 மணி நேரத்திற்குள் அருகில் உள்ள நீதித்துறை நடுவர் (மாஜிஸ்டிரேட்) முன்பு ஆஜர்படுத்த வேண்டும். நீதித்துறை நடுவரின் உத்தரவு இல்லாமல் எந்த ஒருவரையும் 24 மணி நேரத்திற்கு மேல் காவலில் வைக்கக்கூடாது.

9. யாரையும் கைது செய்தால் காவல் அதிகரி கைது செய்யப்படும் நபரின் உறவினருக்கோ அல்லது நண்பருக்கோ உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும்.

10. காவல்துறைக்கு யாரையும் அடிக்கும் அதிகாரம் கிடையாது.

11. காவல்துறை யாரிடமிருந்தும் ஏதாவது பொருட்களை கைப்பற்றினால், அவற்றின் பட்டியல் தயாரித்து சம்பத்தப்பட்டவருக்கு ஒரு நகல் வழங்க வேண்டும்.

12. 18 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியரை காவல் நிலையத்தில் சிறை வைக்கக் கூடாது. சிறார் சீர்திருத்தப் பள்ளிகே அனுப்பி வைக்க வேண்டும்.

பெண்களை கைது செய்தல், காவலில் வைத்தல், சோதனையிடுதல், விசாரித்தல் போன்ற காவல் துறையின் செயல்பாடுகளை

குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் Sheela Barse VsState of Maharashtra (AIR1983 SC 378), Roshan Beevi vs State of Tamilnadu (1984 (1) MLJ(Crl) 363 and D.K. Basu vs State of West Bengal (1997 (1) SCC (Cri) 92) ஆகிய நீதிமன்ற தீர்ப்புகளுமே முறைப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

# 21
# தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்




*தேசிய மகளிர் ஆணைய சட்டம் 1990-ஐ இந்திய பாராளுமன்றம் இயற்றியது. அதனைத் தொடர்ந்து 1992-ம் ஆண்டு தேசிய மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மகளிர் ஆணையம் 1993ல் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய சட்டம் 2018ஆம் ஆனாது, மாநில மகளிர் ஆணையத்தின் பணிகளை வரையறுத்துள்ளது.*

- *அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களின் கீழ் பெண்களை பேணுவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு அமைப்புகள் (Safeguards) தொடர்பான பொருள் குறித்து விசாரணை மேற்கொள்ளுதல் மற்றும் பரிசீலனை செய்தல்.*
- *அவ்வாறு மேற்கொள்ளப்படும் விசாரணை மற்றும் பரிசீலனை தொர்பான அறிக்கையினை அவ்வப்போது அல்லது ஆண்டுதோறும் அரசிற்கு அனுப்பி வைத்தல். பெண்களின் நிலைமையினை உயர்த்திடும் வகையில் அவ்வாறு பாதுகாப்பு அமைப்புமுறைகளை (Safeguards) திறம்பட செயல்படுத்தலாம் என அரசிற்கு பரிந்துரை வழங்குதல்.*
- *அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய பெண்கள் தொடர்பான சட்டங்களின் ஷரத்துக்கள் பெண்களின் நலனுக்கெதிராக மீறப்படும்பட்சத்தில், அதனை உரிய*

அதிகார அமைப்புகளின் கவனத்திற்கு நடவடிக்கை எடுக்கும் வகைக்காக கொண்டு செல்லுதல்.

- பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்திட ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் சரிவர செயல்படுத்தப்படாமலிருந்தாலோ அல்லது பெண்கள் நலன் தொடர்பான அரசின் கொள்கை முடிவுகள் சரிவர பின்பற்றப்படாமலிருந்தாலோ அது தொடர்பாக பெறப்படும் புகார்களையோ அல்லது சுயமாக கவனத்தில் கொண்டோ (Soumoto) உரிய அதிகார அமைப்பிற்கு தக்க நடவடிக்கைகாக பரிந்துரைத்தல்.
- பெண்களின் பிரதிநிதித்துவத்தையும் அவர்களின் மேம்பாட்டினையும் உறுதிசெய்திட ஏதுவாக அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிந்திடும் வகைக்காக கல்வி மற்றும் மேம்பாட்டு ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதல்.
- பெண்களின் சமத்துவத்தையும் அவர்களின் மேம்பாட்டையும் உறுதி செய்தல்.
- பெண்கள் தங்கியிருக்கும் சிறைகள், விடுதிகள் மற்றும் பிற இடங்களை ஆய்வு செய்து, கண்டறியப்படும் குறைகளை நிவர்த்தி செய்ய ஏதுவாக உரிய அதிகார அமைப்பின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்.
- பெண்கள் நலன் தொடர்பான எந்தவொரு பொருண்மை குறித்தும் குறிப்பாக அவர்கள் எதிர்கொள்ளும் சாவல்கள் குறித்து அரசிற்கு அறிக்கை அளித்தல்.
- தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் மூலம் குடும்ப வன்முறை, வரதட்சணை கொடுமை, பாலியல் வன்கொடுமை, இரண்டாம் திருமணம், பணியிடத்தில் பாலியல் வன்கொடுமை, ஆள் கடத்தல் மற்றும் பாதிப்பிற்குள்ளான பெண்களின் புகார் மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**ஒற்றை நிறுத்த மையம்**

இந்த மையமானது தனியார் மற்றும் பொது இடங்களில் வன்முறையால், பாதுக்கப்பட்ட பெண்களுக்கு ஒரே கூரையின் கீழ் ஒருங்கிணைந்த ஆதரவையும், உதவியையும் வழங்குவதற்கு உருவாக்கப்பட்டதாகும். இந்த மையத்தின் சேவைகளாக

1. அவசர கால பதில் மற்றும் மீட்பு சேவைகள்.
2. மருத்துவ உதவி

*3. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய பெண்களுக்கு உதவி.*

*4. உளவியல் - சமூக ஆதரவு மற்றும் ஆலோசனை.*

*5. சட்ட உதவி மற்றும் ஆலோசனை.*

*6. தங்குமிடம் மற்றும்*

*7. காணொளி விசாரணை (Video Conferencing) வசதி.*

*இந்த ஒற்றை நிறுத்த மையங்கள் ஆனது மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுகின்றன.*

**அவசர உதவி எண்கள்**

**குழந்தைகள் உதவி எண் 1098** **பெண்கள் உதவி எண் 1091**

**முதியோர் உதவி எண் 1253** **Cyber Crime எண் 1930**

●●●●●●

# 22
# தமிழ்நாடு மாநில சட்ட சேவைகள் ஆணையம்

*சமூகத்தில் ஏழை மற்றும் பலகீனமான பிரிவினருக்கு நீதி கிடைக்கப்பெறுவதை உறுதிபடுத்தும் வகையில் இலவச சட்ட உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று இந்திய அரசியல் சாசனத்தின் சாசனக் கூறு 39A அறிவுறித்தியுள்ளது. இதனடிப்படையில் கடந்த 1987-ம் வருடம் சட்ட சேவைகள் ஆணையச் சட்டத்தை இந்திய நாடாளுமன்றம் இயற்றியது.*

*தமிழ்நாட்டில் "சட்ட உதவி மையம்" என்று அழைக்கிறோம். மாநிலத்தின் அனைத்து தாலுகா மற்றும் மாவட்ட நீதிமன்றங்களிலும் சட்ட உதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.*

**சட்ட உதவி மையத்தின் பணிகள்:**

- *தகுதியானவர்களுக்கு இலவச சட்ட உதவிகள் செய்வது.*

*கீழ்காணும் நபர்கள் இலவச சட்ட உதவி பெற தகுதியானவர்கள் ஆவார்கள்:*

- *பெண்கள் / குழந்தைகள்*
- *தாழ்த்தப்பட்ட / பழங்குடியின மக்கள்*
- *தொழிலாளிகள்*

- *போரிடர் / கலவரம் மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள்*
- *மாற்றுத்திரனாளிகள்*
- *சிறைவாசிகள்*
- *ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/-க்கு மிகாதவர்கள்*
- *ஆள்கடத்தல் குற்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள்*

**எப்படிப்பட்ட உதவிகள்**

- *வழக்குகளுக்கு வழக்குறைஞரை நியமித்து கொடுப்பது*
- *வழக்கு தொடுக்க / எதிர் கொள்ள செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணங்களை செலுத்துவது*
- *நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய மனுக்கள் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் தயார் செய்வது.*

*ஆகியவற்றை உள்ளடக்கிய உதவிகள் கிடைக்கும்.*

*2018-ம் ஆண்டில் தேசிய சட்ட சேவைகள் ஆணையமானது பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட / இதர குற்றங்களில் தப்பிப் பிழைக்கும் பெண்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீடு குறித்து கீழ்காணும் வகையில் பரிந்துறை செய்துள்ளது;*

| வ.எ | காயத்தின் விபரம் | குறைந்தபட்ச இழப்பீடு | அதிகபட்ச் இழப்பீடு |
|---|---|---|---|
| 1 | கூட்டு பாலியல் வண்புணர்வு | ரூ. 5 லட்சம் | ரூ. 10 லட்சம் |
| 2. | பாலியல் வண்புணர்வு | ரூ. 4 லட்சம் | ரூ. 7 லட்சம் |
| 3. | மறுவாழ்வு தேவைப்படும் அளவிற்கான தீவிரமான உடல் ரீதியிலான காயங்கள் / மன/உளவியல் ரீதியான காயங்கள் | ரூ. 1 லட்சம் | ரூ. 2 லட்சம் |
| 4 | அமில வீச்சால் பாதிக்கப்பட்டவர்கள் | | |
| அ. | முகம் சிதைக்கப்பட்டிருப்பின் | ரூ. 7 லட்சம் | ரூ. 8 லட்சம் |
| ஆ | 50%க்கு மேல் காயம் ஏற்பட்டிருந்தால் | ரூ. 5 லட்சம் | ரூ. 8 லட்சம் |
| இ | 50%க்கு குறைவாக காயம் ஏற்பட்டிருந்தால் | ரூ. 3 லட்சம் | ரூ. 5 லட்சம் |
| ஈ | 20%க்கு குறைவாக காயம் ஏற்பட்டிருந்தால் | ரூ. 3 லட்சம் | ரூ. 4 லட்சம் |